# கட்டாயத் திருமணம் மற்றும் கட்டாயத் திருமண வாழ்க்கைக்கு எதிராக

## நான் யாரைத் திருமணம் செய்வேன் என்பதை நான் முடிவு செய்கிறேன்!

**விருப்பமின்றி வாக்குறுதி அளிக்கப்பட்டதா, நிச்சயதார்த்தம் செய்யப்பட்டதா அல்லது திருமணம் செய்யப்பட்டதா?**
உன் விருப்பத்திற்கு எதிராக நிச்சயதார்த்தம் அல்லது திருமணம் செய்யப்படும் என்று பயப்படுகிறாயா?
நீ உன் திருமண வாழ்வை முடித்துக் கொள்ள விரும்புகிறாய், ஆனால் எப்படி என்று தெரியவில்லையா?
ஒரு நண்பர் அவரின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கப்படுகிறாரா?

**கட்டாயத் திருமணம் & கட்டாயத் திருமண வாழ்க்கை என்றால் என்ன?**
சில சமயங்களில் பெற்றோர்கள், உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் அழுத்தம் அல்லது வன்முறை மூலம் தாங்கள் எது சிறந்தது என்று நினைக்கிறார்களோ அதைத் திணிக்க முயற்சிப்பார்கள். நீ திருமணம் செய்து கொள்ள அல்லது திருமண வாழ்வைத் தொடர ஒப்புக் கொள்ளாவிட்டால், நீ உன் குடும்பத்திற்கு அவமானத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் உன்னைக் குற்றம் சாட்டலாம். உன் விருப்பத்தை யாரும் கேட்கவில்லை அல்லது உன் விருப்பத்தை மதிக்கவில்லை.
ஒரு திருமணத்தில், திருமணம் செய்து கொள்ளப்போகும் இருவரும் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் "ஆம்" என்று சொல்ல முடியா விட்டால், அது **கட்டாயத் திருமணம்** ஆகும்.
**கட்டாயத் திருமண வாழ்க்கை** என்பது, உன் குடும்பத்தினரால் திருமண வாழ்க்கையைத் தொடருமாறு நீ கட்டாயப்படுத்தப்பட்டு , பிரிந்து செல்ல அனுமதிக்கப்படாமல் இருப்பது.

**சுவிட்சர்லாந்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு. ஒவ்வொருவரும் திருமணம் செய்து கொள்வதையும், யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் தாங்களே முடிவு செய்கிறார்கள்.**

**இதிலிருந்து வெளிவர வழிகள் உள்ளன - ஆதரவைப் பெறுங்கள்.**
கடினமான சூழ்நிலைகளில் இளைஞர்களுக்கு உதவும் **சிறப்பு மற்றும் ஆலோசனை மையங்கள்** உள்ளன. அவர்கள் உன்னை ஆதரிக்கலாம் , மேலும் உனது அடுத்த நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்பதை உனக்குக் காட்டலாம். ஆலோசனை மையங்களின் ஊழியர்கள் ரகசியத்தை காப்பவர்கள், மேலும் உன் அனுமதியின்றி யாரையும் தொடர்பு கொள்ள மாட்டார்கள்.
நீ விரும்பினால், உன் பெயரைக் குறிப்பிடாமல் அநாமதேயமாகவும் ஆலோசனையைப் பெறலாம். இந்த ஆலோசனைகள் பொதுவாக இலவசம்.

# ஆலோசனை மற்றும் ஆதரவுச் சலுகைகள்

## நீ ஆலோசனையை விரும்பினால் அல்லது உன் உரிமைகளைத் தெளிவுபடுத்த விரும்பினால்:

**பாதிக்கப்பட்டோர் ஆலோசனை மையங்கள், மத்திய சுவிட்சர்லாந்து**

**லூசர்ன்/நிட்வால்டன்** https://disg.lu.ch/themen/opferberatung/Opferberatung_inhalt

**ஒப்வால்டன்** https://www.ow.ch/fachbereiche/1676

**உரி / ஷ்வூட்ஸ்** https://www.opferberatung-sz-ur.ch

**சூக்** https://www.eff-zett.ch/angebot/opferberatung

**சுவிட்சர்லாந்தில் பாதிக்கப்பட்டோருக்கான பிற ஆலோசனை மையங்கள்** www.opferhilfe-schweiz.ch

## பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நிபுணர்களுக்கான கூடுதல் ஆலோசனைகள்:

**கட்டாயத் திருமண சிறப்புப் பிரிவு** www.zwangsheirat.ch

**உன் பகுதியில் உள்ள இளைஞர் ஆலோசனை மையம்** www.no-zoff.ch

**உன் பள்ளி சமூக சேவகர்**

**FABIA இடம்பெயர்வு திறன் மையம்** www.fabialuzern.ch

## புகலிடங்கள் / நிறுவனங்கள், 24 மணி நேரமும் கிடைக்கும்.:

**பெண்கள் இல்லம் சூரிச்** www.maedchenhaus.ch 044 341 49 45, 079 478 46 79

**பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஷ்லூப்ஹௌஸ்** www.schlupfhuus.ch 043 268 22 66

**பெண்கள் தங்குமிடம் லூசெர்ன்** www.frauenhaus-luzern.ch 041 360 70 00

**பெண்கள் விடுதி சூக்** www.herbergefuerfrauen.ch 041 727 76 86

**இளைஞர்கள் கவலை தீர்ப்பு தொலைபேசி** www.147.ch 147

## அவசரகாலத்தில்: போலீஸ் அவசர எண் 117